
இராஜேஸ்கண்ணனின்

# போர்வைக்குள் வாழ்வு



செல்லக்கிட்டி கணேசன்.

போர்வைக்குள் வாழ்வு (கவிதைகள்)
ஆசிரியர் - இராஜேஸ்கண்ணன்
பதிப்புரிமை - சுனிதா இராஜேஸ்கண்ணன்
முதற்பதிப்பு - 2007.
வெளியீடு - சாத்வீகசுருதி, இமையாணன், உடுப்பிட்டி.
அச்சு - மதுரன் கிறா(f)பிக்ஸ்
சமர்ப்பணம் : எழுத்தறிவித்தவர்களுக்கு...

# போர்வைக்குள் வாழ்வு

இராஜேஸ்கண்ணன்

வெளியீடு
சாத்வீக சுருதி
இமையாணன்
உடுப்பிட்டி.
2007

நன்றி

- சஞ்சீவி
- தினக்குரல்
- இதயசங்கமம்
- ஞானம்
- சுட்டுவிரல்
- காலச்சுவடு [ஜன-பிப் 2003]

[அட்டைப்படத்துக்காக]

# அறிமுகமாக...

'போர்வைக்குள் வாழ்வு', இராஜேஸ்கண்ணனின் பன்னிரு கவிதைகளின் தொகுப்புநூல். 1997முதல் 2007வரை உள்ள காலப்பகுதியில் இவை எழுதப்பட்டவை; வார வெளியீடுகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமானவை. காலவரிசைப்படி ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இக்கவிதைகளில் ஒரு தசாப்தகால நடப்புகளின் சிறுவெட்டுமுகம் தெரிகிறது.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகளின் சாரமாய் வெளித்தெரிபவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

கண்காட்சிப் பொருளான புலம்பெயர் வாழ்வு
மனிதத்தின் 'சுயம் இழந்த கையறுநிலை'
அறிவியலையும் விஞ்சிய மானுடத்தின் வீழ்ச்சி
மிடுக்கொழிந்து திசைமாறிப்போன வாழ்க்கை
அந்நியத்தின் அநாவசிய 'மூக்கு நுழைப்பு'

காலம் கடந்தும் நிற்கும் காணிச்சண்டை
ஒளிகுன்றிய 'ஊரடங்கு வாழ்வு'
ஒட்டாத காதற் களிப்பு
எதிர்கால வசந்தங்களைத் தொலைத்த 'சிறுவர் ஊழியம்'
வளமிழந்த அகதிநிலை
'அற்றைத் திங்களான' இற்றைச் சோகங்கள்
படைத்தவனுக்கே படிப்பினை காட்டும் சமூகநீதி.

ஆனால் இவ்வெளிப்பாடுகளுக்கும் அப்பால் இக்கவிதைகள் யாவற்றினதும் உள்ளார்த்தமாய் விளங்குவது போர்வைக்குள் முடங்கிப்போன வாழ்வன்று; வாழ்வின் முடக்கமுற்ற சோகமே. 'கவிதை என்றால் என்ன?' என்ற வினாவுக்கு வரையறையுள்ள விடையொன்றைக் கொடுக்க முடியாதென உரைப்பர். ஆயினும், 'குறிப்புணர்த்தல்' கவிதையின் அடிநாதம். கவிதை வெளிப்படையாக ஒன்றைச் சொல்லினும் அது வேறொன்றை அர்த்தப்படுத்துகிறது. கவிதை குறித்த இந்தத் 'தெரிநிலை' *(awareness)* கவிதையைப் படைப்போர்க்கும் அதனைப் படிப்போர்க்கும் ஏற்படாதவிடத்து கவிதை 'தன்னிலை' இழக்கும்.

இராஜேஸ்கண்ணனிடத்து கவிதை பற்றிய தெரிநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம், அண்மைக்காலக் கவிதைகளில், 'குறிப்புணர்த்தும்' நிலையில் மெல்ல மெல்லத் தொனிக்கிறது. இத்தொனிப்பு செழுமையுற இராஜேஸ் கண்ணனின் 'அறிகை அமைப்பு' *(Cognitive structure)* விரிவுபடவேண்டும். இதற்கான வாய்ப்புகள் இராஜேஸ்கண்ணனுக்கு நிறையவே உண்டு. ஏனெனில், இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் சிறப்புப் பட்டதாரி; மானுடவியலை ஒரு பாடமாகப் பயின்று பட்டப்படிப்பு நிலையில் சில வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்



விரிவுரையாற்றியவர்; இன்று யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியர்; 'முதுசொமாக' என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதி மூலம் அடையாளம் பதித்தவர். (இவரின் சிறுகதையொன்று தரம் 10-தமிழ் இலக்கிய பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது). மேலும், இலக்கியம், பண்பாடு, சமூகவியல் என்பன குறித்து கட்டுரைகள் எழுதிவருபவர் இவர். தற்போது பட்டப்பின் படிப்பு 'கல்வி டிப்ளோமா' நெறியைப் பயின்று வரும் இராஜேஸ்கண்ணன் அப்பயிற்சி நெறியில் 'உளவியலை'யும் ஒரு பாடமாகப் பயின்று வருகின்றார். இவை யாவும் 'இராஜேஸ்கண்ணனிடமிருந்து சிறந்த படைப்புகளை எதிர்பார்க்கலாம்' என்ற நம்பிக்கையைத் தருகின்றன. அந்த நம்பிக்கை 'மெய்ப்பட வேண்டும்' என்று வாழ்த்துகிறேன்.

**கலாநிதி த.கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியற் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## சந்தங்களால் இணையும் வாழ்வு

'முதுசொமாக' சிறுகதைத் தொகுதியின் மூலம் ஈழத்து இலக்கிய உலகில் அறிமுகமாகிய இராஜேஸ்கண்ணனின் கவிதைத் தொகுதிக்கு இக்குறிப்பினை வரைவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தொகுப்பில் மொத்தம் 12 கவிதைகள் அடங்கியுள்ளன. தமிழ் மக்கள் இந்தப் போர்ச்சூழலுக்குள் கடந்து வந்து கொண்டிருக்கின்ற வாழ்வை, அதன் இழப்புக்களை, அதனால் ஏற்பட்ட வடுக்களை இக்கவிதைகள் பதிவுசெய்கின்றன.

எல்லாக் கவிதைகளுக்கும் அடிநாதமாக ஒரு கவிதைச் சரடு கவிதைகளின் ஊடே ஓடிக்கொண்டிருக்கின்றது. போரும் அது ஏற்படுத்திய வடுக்களும் மக்களின் வாழ்வை எவ்வாறு சிதைத்து விட்டது என்பதும், அந்த இழந்து விட்ட வாழ்வினூடே உயிர்த்திருத்தலுக்கான தேடலும் அது மானிடத்தை நோக்கியதாகவும் அமைந்து விடுவதனை இத்தொகுப்பின் கவிதைகள் சுட்டி நிற்கின்றன.



இளமை வாழ்வும், சமூகத்துடன், கிராமத்துடன், நண்பர்களுடன் ஒட்டிய இயல்பான வாழ்வும் பறிக்கப்பட்டதான வேதனை. அந்த வேதனை எல்லாக் கவிதைகளிலும் ஒரு ஓட்டமாக உள்ளார்ந்து ஓடிக்கொண்டேயிருக்கிறது. காதலியுடன் கைகோர்த்து கதைபேசும் வேளையிலும், நண்பர்களுடன் நிலவொளியில் நாலுகதை பேசும்போதும், இயற்கை அழகில் மோகித்து கவியாடும் போதும்கூட அது எங்கள் மனங்களில் ஏற்படுத்தி விடுகின்ற சூழல் சார்ந்த பயமும் அதனால் ஏற்பட்ட ஒவ்வொரு மானிட இழப்புக்களும் கூடவே தலைகாட்டுகின்றன.

'உச்சி வகிர்ந்து
தலை பின்னி 'றிபன்' முடித்து
தொப்பி கால் மேசுடனே
சப்பாத்தும் அணிந்து கொண்டு
வெள்ளைச் சிறகடித்து
பள்ளிப் பூங்காவில்
துள்ளிப் பறந்து வரும்
பட்டாம் பூச்சியே ....'

என்ற 'பிள்ளைக் கூலிகள்' கவிதையும் கூட எங்கள் பிஞ்சுகள் இழந்து விட்ட எத்தனையோ இழப்புக்களையே கூறுகின்றது.

இது இன்னொரு விதமாக ஐந்தறிவு கொண்ட ஜீவனாகிய நாயிடம் 'இந்த நாட்டில் மானிடம் இருந்தால் உன் மோப்பக் குணத்தால் மோந்து சொல்' என்பதாகவும், மீண்டும் தொடங்கும் மிடுக்கைத் தந்த கவிஞர் மஹாகவியிடம் 'நீ கண்ட மிடுக்கு இன்று என்னென்ன வடிவத்தில் எம் மக்களிடம் வாழுகின்றது பார்' என்று கூறும்வேளையிலும், தொகுப்பின் இறுதியில் அமைந்த கவிதையிலே கடவுள்கூட இந்த மானிடர்களிடம் மன்னிப்புக்கேட்கும் நிலையிலும், என்று எல்லாக் கவிதைகளுமே தொலைந்து போன மானிடத்தைத் தேடுவதாகத்தான் உள்ளது.

இவற்றோடு இன்னும் சொல்லவேண்டியவை கவிஞர் தன் மக்களோடு நிற்கின்றார் என்பது. *'கவிதை மக்கள் மொழியிலிருந்து கருக்கொள்கிறது அதன் சக்திகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது'* என்று டி. எஸ். எலியட் கருதினார். அது இத்தொகுதியைப் பார்க்கும்போதும் ஞாபகம் வருகின்றது. கவிதைகள் மக்களின் வாழ்விலிருந்து அவர்களின் படிப்பினையிலிருந்தும் பிறக்கின்றன. அது சமூகத்தின் குறைபாடுகளைக் கண்டு பாடும்போதும் 'ஊடுருவல்' கவிதையில் மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

'கத்தியோடு கந்தவனம்
கம்பி தாங்கிக் கார்த்திகேசு
கதிகால் கட்டை யெல்லாம்
கத்தி வெட்டில் இடுப்பொடிந்து'

என எம் மக்களின் வாழ்வுடன் இரண்டறப் பிணைந்து இன்னமும் மாற்றமுடியாமலும் மாறமுடியாதுமுள்ள எல்லைச்சண்டை, வேலிச் சண்டையிலும் அழகாகவே பதிவாகின்றது.

'போர்வைக்குள் வாழ்வு' என்ற கவிதை மிக இயல்பான நடை. கிராமிய வாழ்வும் அவர்கள் சிறுகச்சிறுகச் சேகரித்து வாழ்ந்த வாழ்க்கையும் இங்கு பேசப்படுகின்றது.

"முற்றத்து வேப்பமரம்
பின் வளவுத் தென்னந்தோப்பு
பத்துப் பரப்பிலே
முளையெறிந்த செய்கைநிலம்
சின்னப் பாதியிலே
பிஞ்சுவிட்ட பிலாமரம்
சீட்டுப் பிடித்து வாங்கி
கட்டிவைத்த கறவை மாடு



அறுவடைக்குப் பின்வந்த
அந்தரண்டு வைக்கற்போர்
காயவைத்த புழுக்கொடியல்
காசுசேர்த்த 'சல்லிமுட்டி'
பாடம்போட்டு வைத்திருந்த
சிப்பங்கட்டாப் பொயிலைச் சுமை
ஒய்வொழிச்சல் இல்லாமல்
உழைத்த காசால் உயர்ந்த வீடு"

இவ்வாறெல்லாம் எம் முன்னோர் கஷ்டப்பட்டு சேகரித்தார்களா? என்று நம் எதிர்கால சந்ததி ஐயப்படும் நிலை வந்தாலும்கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்றைய உலகமயமாக்கல் நுகர்வுப் பொருளாதாரத்தில் (Globalisation) இவற்றைப் பற்றி யோசிப்பதற்கே அவர்களுக்கு நேரம் இருக்குமோ தெரியாது.

இக்கவிதைகளின் பலமாக நான் கருதுவது; அதன் ஓசைநயமும் சொற்களின் இலாவகமும் ஆகும். கவிரயங்கக் கவிதைகளில் இது வரும்போது மக்களை மிக இலகுவாக சென்றடைந்து விடுகிறது. கவர்ந்து விடுகிறது. அந்தப் பண்பையும் இத்தொகுப்பில் கண்டுகொள்ள முடிகிறது. அதேநேரம் இதிலிருக்கும் இன்னொரு முக்கிய அம்சத்தையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

'பேச்சுமொழியின் சொற்களை பயன்படுத்து கின்றபோது:
கவிதை மக்களை நோக்கி மிக அருகில் வருகிறபோது.
அது ஒரு வட்டாரத்தன்மையைப் பெற்று அதன் புரியும்
தன்மை ஒரு குறுகிய வட்டத்துக்கு உரியதாகிவிடுகிறது'
(கவிதையின் அரசியல். இந்திரன். ப.102)

என்ற ஒரு கருத்தும் உள்ளது. இதனாலேயே கவிதைகள் தம் மொழியின் ஆழங்களைத் தேடி நகரவேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன. மொழியின் ஆழமும் உணர்வின் வேகமும் சொற்களின் வசீகரமும் கவிதையை மேலும் பல தளங்களுக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பைத் தந்துவிடுகின்றன.

கவிஞன் எமது வாழ்வை, இழப்பை, துயரை புறநிலையில் நின்று சொல்வதுபோல் அகநிலையிலும் பதிவுசெய்யும்போது அது கவிதைகளை மேலும் செழுமைப்படுத்துகின்றன. 'போர்வைக்குள் வாழ்வு' கவிதையில் அதற்குரிய சாத்தியம் உள்ளது. எனினும் இத்தொகுப்பில் அது புறநிலையான அனுபவமாகவே பதிவு பெற்று நின்று விடுகிறது.

இவ்விடத்தில் கி. பி. அரவிந்தனின் கவிதை ஒன்றினை இங்கு நினைவுபடுத்தலாம் என எண்ணுகிறேன்.

'பிடிக்கப் பிடிக்க
சறுக்குகின்றது.

ஏறிய இடத்திலாயினும்
இறங்கலாமென்றால்
வழுக்கிச் செல்கிறது சரிவு

ஏறிய இடம் எது...?

நின்றேறிய இடத்திற்கும் கீழுமா
இத்தனை இருட்பாழும்...?
அல்லது அங்கேதான் ஏறினேனா...?
அழுகையும் விம்மலும்
சூழ்ந்த
ஏழேழு நிறத் துக்கமும்
படிவுகளான மௌன இருட்திட்டு.'



இந்தக் கவிதையில் இருக்கும் ஆழ்ந்த மௌனமும் வாய்விட்டு அழமுடியாத சோகமும் அவரவர் அனுபவத்திற்கும் உணர்வுக்கும் ஏற்ப மாறுபடும். இங்கு அகநிலை அனுபவம் பேசப்படுகிறது. இருட்குகையில் இருந்து அழும் எங்கள் மக்களின் நிலையும் இதுதான். இதைத்தான் இராஜேஸ்கண்ணனும் தன் மக்களின் வாழ்வில் காண்கிறார். அது அவரது மொழியில் பேசுகிறது.

எனவே இராஜேஸ்கண்ணனின் கவிதைகளானது மொழியின் ஆழங்களைத் தேடிச் செல்லவும் மக்களின் வாழ்வினை உணர்வுச் செறிவுடன் பேசவும் இன்னமும் எதிர்காலத்தில் பயணிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நண்பரின் இந்த முயற்சி வெற்றிபெறவேண்டும் எனவும் உளமார எண்ணுகிறேன்.

**சு. குணேஸ்வரன்**
'தினைப்புனம்'
மயிலிட்டி,
அல்வாய்.
14-10-2007

# ஒத்து அதிரும் உணர்வுகளாய்...

இவை
கவிதைகளாய் கரையும் கதைகளா?
கதைகளாய் கனக்கும் கவிதைகளா?
இன்று என் மனதில் தெளிந்த ஒரு வரையறை இல்லை.

மனதை ரணமாக்கிய
மனிதவாழ்வின் நிதர்சனங்கள்
என்னுள் இருந்து ஏதோ ஒரு வடிவமாகி வெளிக்கிளர்ந்தது

வடிவம் எதுவாயினும்
எனது மனத்தோரத்து ரணங்களுக்கு
வாய்த்த வடிகால்களிவை.

சிறுகதை எனக்கு முகவரி தந்தது
சிறுகதைக்குள் சிக்காத என் அனுபவங்கள்
சிறு கவிதைகளாகி...



கவிதை என்றால் என்ன?
கவிதைக்கு இருக்கவேண்டிய தரம் என்ன?
கவிதை வெளிவரும் கருத்தியல் சார் குழும உணர்வு எது?
இவையாவும் இன்றைய அளவுகோல்களாகி நிற்க
விடைகாண முடியாத விவாதங்களிடையே
ஒவ்வொரு உயிரிலும்
ஒத்து அதிரும் உணர்வுகளாய் இவை!.........

1997 தொடக்கம்
சத்திராதி, இராகவ், இராஜேஸ்கண்ணன்
என்ற பெயர்களில்
உதயன்-சஞ்சீவி, தினக்குரல், கவிதைச்சரம்,
சுட்டுவிரல், இதயசங்கமம், ஞானம்
என்பவற்றினூடு வெளிப்பட்ட
என்மன அவசங்களின் வெளிப்பாடுகளில் சிலதான் இவை

வாழ்வின் அனுபவங்கள் வரிவடிவம் பெறும்போது
அவை
தனி ஒருவனுக்கு வடிகால்களாவது ஒருபுறமிருக்க
அந்தத் தனி ஒருவனது வரிவடிவம் தரும் அனுபவங்கள்
பிறருடன் ஒத்து உணர்வு பெறும் நிலையில்
பலரின் உள்ளங்களில் இறங்கும் போதிலே
அவன்
அனுபவத்திற்கு வரிவடிவம் கொடுக்கும்
தன் ஆத்மார்த்தமான பணியிலே வெற்றி பெறுகிறான்
இல்லையெனில் தோற்றுப் போகிறான்.
இசை காதுகளோடு காணாமற் போவதில்லை.
சுகந்த சுகம் மூக்கோடு முடிவதில்லை.
எழில் கண்ணோடு கரைவதில்லை.

இவை நெஞ்சோடு லயிக்கும் போதில்தான்
அர்த்தம் பெறுகின்றன.
கவிதையும் அப்படித்தான் !
நெஞ்சை கிழித்து முகிழ்த்து எழும்.
நெஞ்சை கிழித்துப் பதனிட்டுப் போடும்.

அது புத்திக்குரியது என்பதிலும்
நெஞ்சுக்குரியது என்பதுதான்
அதன் வெற்றிக்கு காரணம்.

நெஞ்சத்தை நிறைத்த அனுபவ உதிரிகளை
தொகுக்க முனைந்த என் முயற்சியில்
என்னோடு கைகோர்த்து
உயிரிலே கலந்த உறவுகளாகி
என்னை அறிமுகப்படுத்திய பல்துறைக் கலைஞரும்
யாழ்பல்கலைக்கழக கல்வியியற்துறை
சிரேஸ்ட விரிவுரையாளருமான கலாநிதி த.கலாமணி அவர்களுக்கும்

முகவுரை தந்த
புலம்பெயர் இலக்கிய ஆய்வாளரும், நண்பருமான கவிஞர் சு.குனேஸ்வரன்
அவர்களுக்கும்
அட்டைப்பட வடிவமைப்பில் உதவிய நண்பர் நந்தீஸ்வரன் அவர்களுக்கும்
மிகுந்த ஈடுபாட்டுடன் அச்சு வடிவமைப்புச் செய்துதந்த மதுரன் கிராபிக்ஸ்
மகேஸ்வரன் அவர்களுக்கும்
உள்ளத்தால் நன்றிகள்

**இ.இராஜேஸ்கண்ணன்.**
'சாத்வீக பிரஸ்தம்',
இமையாணன்,
உடுப்பிட்டி. 05.11.2007.





# அந்நிய மண்ணிலிருந்து ஒரு மடல்

கஞ்சல் இல்லாத தெரு
கண்ணுக்கு நெருக்கமிலாக்
கழன முகங்களிவை.
கரண்டு பாய்ச்சிய
கம்பியூட்டர் வாழ்க்கை.

* * *

பங்குனி மாதத்துப்
பகலவன் கொதிக்கையிலே
பாழடைந்த பிள்ளையாரின்
ஆலடியின் நிழல்.

அங்குமிங்கும் காற்றுக்கு
அலைந்தோழ
பூவரசம் இலைச் சருகு
சுதந்திரமாய் விளையாடும்.

தங்கராசா சீவுகின்ற
ஒற்றைப் பனையிலுள்ள
முட்டிக்கு,
கெற்றப் புள்ளடித்து
வாயை அண்ணாத்தி
குடித்து,
கண்டுவிட்ட அப்பாவிடம்
காதைப் பொத்தி அடிவாங்கித்
துடித்து,

ரியூட்டரி விட்டுவரும்
"பெட்டையளைப்" பார்ப்பதற்கு
கொன்றைமர மதவடியில்
கொலுவிருந்த காலமெங்கே?........

கிட்டினி வீட்டுத் தென்னையிலே
கள்ளமாகக் குலையிறக்கி
கடற்கரை மணலினிலே சூழக்குந்தி
கனகதைகள் அளந்த காலம்?.....

தீபாவளியிரவு
சந்திராவின் "வெள்ளடியன்"
சட்டியிலே போனகதை
இன்னுமே இனித்திருக்கு.

திருவெம்பாக் காலத்திலே
சங்கூதித் தெருத் தெருவாய்
பக்தி பொங்க பஜனை பாடி
கடலைக்காக அலைந்த காலம்?....

வல்லிபுரக் கோயிலிலே
மணலேறித் தீர்த்தமாட
"பைனக்குலர்" பிடித்ததனை
புதினமாகப் பார்த்து நின்ற
வெள்ளை உடல்களை நாம்
புதினம் பார்த்த காலமோடி
இப்போ !...
வெள்ளைகள் எம்மையெல்லாம்
புதினமாய் பார்க்குதையோ !...





எங்கோ தொலைந்தனவோ
எங்கள் காலமெல்லாம்?....
அங்கே எங்கள் வீட்டில்
ஆரோ இருக்கினமாம்.

* * *

நாலு சுவர் நடுவே
நான்கைந்து ஜீவன்கள்
நானும் மனைவியும்
இராப்பகலாய் எந்திரங்கள்
பிள்ளைகள் இருவரும்
பிள்ளைக் காப்பு நிலையத்தில்.

07.06.1997.

# சுயம் கரைந்த மனங்கள்

குருதி உறையும் குளிர்
மழையில் தோய்ந்த மரங்கள்
இலைப் பின்னல்களால்
நிலத்தில் வழியும் நிலவொளி
இலை விளிம்பில் ஊர்ந்தொழுகும்
பனித்தணல் சொட்டுக்கள்
முகிலிடுக்கில் முளைக்கும்
மின்னல் கீற்றுக்கள்.

இயற்கையின் ரகசியங்கள்
இதயத்தை வருடுகையில்
முற்றத்தில் இறங்க ஏனோ
என் கால்கள் மறுக்கின்றன.

* * *

"செக்கண்ட் ஷோ" பார்த்துவிட்டு
"சங்குண்ணி" கடையிலொரு
வடைகழத்து "ரீ" குடித்து
வந்த பெண்கள் போகும் வரை
வாசலிலே காத்திருந்து
வழியனுப்பி வைத்துவிட்டு

புளியடிச்சந்தியிலே
"மேக்கூரி" நிலவொளியில்
நண்பருடன் நாலுகதை
நயமாக அளந்து விட்டு





வீடு சென்ற காலமொன்று
விரைந்தே வந்திடுமோ?...

* * *

வான முகட்டில் மின்னும்
தாரகைகள் - ஏனோ?
தம்முள் மயங்கி ஒழிகின்றன.

இதயத்துச் சுமையெல்லாம்
கவியாகக் குமைந்து வர
கூதல் காற்றினிலே
கரைந்து வரும் "நாய்குரைப்பு"
எழுத மறுக்கும் என் பேனா
சுயம் கரைந்து வெறுமையானேன்.

20.07.1998.

# உயிர்த்தெழ வைத்திடுமா?

வன்முறைக்குள் வீழ்ந்து
வாழ்வைத் தொலைத்து
புழுதியில் தொலைத்த
நிஜத்தின் முகத்தினை
வான் முகட்டில் தேடி
வாழாக் கிடப்போரே!..
பாதங் கடந்த
பாதை பாருங்கள்.

மீதியாய் கிடப்பவை?......
மிதி வெடிகளும்
"மிக்" போட்ட குண்டுகளும்
மீளத்தோண்டுகின்ற
மனிதப் புதைகுழியும்.

பூவொன்றின் மார்பிலே
முகம் புதைத்த வண்டொன்று
பூகம்ப ஒலி கேட்டு
பூமடியில் மடிந்த நிலை.

எதிர்கால கால்களுக்கு
நிகழ்காலக் கடைகளிலே
"செப்புக்கால்" வியாபாரம்
சிறப்பாக நடக்கும் நிலை

பள்ளிவாசல் படிகடந்து
இராமன் புகுவதற்கு
சம்மட்டி பிக்கானுடன்
பேரணிகள் செல்லும் நிலை.





சல்மான் ருஷ்டிக்கும்
தஸ்லீமா நஷ்டினுக்கும்
சாத்தானின் ஊழியரால்
அஞ்ஞாத வாசநிலை.

நாசாவின் "நற்பணியும்"
அணுவெடிச் சோதனையும்
கம்பியூட்டர் சாவிகளும்
இன்ரர் நெட்டின் விந்தைகளும்

மனிதத்தைப் புதைத்துவிட
புதைகுழிகள் வெட்டிடுமா?....
மரணித்த மனிதத்தை
உயிர்த்தெழ வைத்திடுமா?

08.08.1998.

## “மீண்டும் தொடங்கும் மிடுக்கு” - எங்கே?

உருத்திர மூர்த்திக் கவி!
உன்னூரான் உதிரமெல்லாம்
உரமேறிப்போன கதை
மழை பார்த்து மண் கிண்டி
உழுதுண்டு வாழ்ந்த கதை
மீளத் தொடங்கும் மிடுக்கெனவே
மார்பைத் தட்டிக் கவிவடித்தாய்

இப்போது ஒரு கணம் - உன்
ஊரானைப்பார்த்து விட்டால்
நெஞ்சங் கரைந்து - முகம்
கிழிந்து சுயமிழப்பாய்.

செக்கலுக்கு ளெழும்பி நிதம்
கப்பலுக்கு கனவு காணும்
அங்கலாய்த்த வாழ்விதனை
செப்பிடவா மிடுக்கு என்று?...

“லொட்ஜ்”க்குள்”, “ட்ராப்டு” களால்
சொர்க்கத்தை கண்டழுந்தும்
இலந்தையடிச் சுகவாழ்வு
தொலைந்ததனை மிடுக்கெனவா?...

கடைத் தெருவின் ஓடையிலே
“மினி”த் திரையின் “நீல ஒளி”
இனிப்பு என கூடிவரும்
இளசுகளின் மிடுக்கு என்னே!...





கலால் வரியேத்தக்
கப்பல் திசைமாற
உதட்டுவத்தி சீனியெண்ணெய்
உலகறியா தொழிந்து கொள்ளும்
கலக்க வாழ்வை மிடுக்கெனவா?......

இறங்கியேறி ஜ. சி காட்டி
சுயந்தேடி தடவ விட்டு
“யண்ட” என்ற வார்த்தைக்காய்
பல்லிழித்தல் மிடுக்கெனவா?

கல்யாணச் சந்தையிலே
கடுவன் ஒன்று பத்துப் போகும்
காம்பகன்று மாலையாகா
பூவின் கண்ணீர் மிடுக்கெனவா?

கவியே!
நீ கண்ட மிடுக் கொழிந்து - நிதம்
புது மிடுக்கி லலைகின்றார்.
மணித்துளியின் மடிவெல்லாம்
மாறிடக் கண்டிருந்தும்,
நம்மவரின் மிடுக்கென்று
நானெதனைச் சொல்லிவிட
“நாம்” தொலைந்த
நம் மண்ணில்?.......

20.03.1999.

# ஊர்தாயின் உறவு

அந்நிய தேசத்து
"அல்ஷேஷ்ய" உடன்பிறப்பே
ஆரைத் தேடியிங்கு
அலைகின்றாய் நிமிர்ந்து சொல்?

எமைத் தொலைத்த நாமே
தலை நிமிர்ந்து நிற்கையிலே
எதைத் தொலைத்து நீயும்
தலைகுனிந்து நின்றாய்?

பச்சை உடைபார்த்து
பலகாலம் குரைக்கின்றோம்
பச்சையாய் உடல் சிதையப்
பார்த்தே ஊளையிட்டோம் !

கண்ணி வெடி தேடுகையில்
கண்ணாய் எனை வளர்த்த
கஸ்தூரி தங்கை அவள்
காலடியைத் தேடிச்சொல்

விதைப்பதுவும் புதைப்பதுவும்
விதி எங்கள் விதி கண்டாய்
விதைத்தவர்கள் அறுக்கட்டும்
வீணே ஏன் நீ வந்தாய்?

எச்சில் இலை உண்ணும்
எங்களுக்கேன் வீண்வம்பு
எட்டியே நின்று கொண்டால்
எம் வாழ்வு நலமாகும் !





உன்னால் முடிந்து விட்டால்
ஒருதவி செய்துவிடு
"கண்ணியும் கபாலமும்"
கண்டு அலுத்து விட்டோம்

மேலொருவன் தந்து விட்ட
மோப்பக் குணமதனால்
மேதினியில் மோந்தலைந்து
மானுடத்தை தேடிக் காண் !

11.09.1999.

# ஊடுருவல்?

கந்தவனம் வீட்டுக்
கடைவேலி ஓரம்
"கார்கில்" கருத்தரிப்பு !

"இந்து" வில்லை
"இஸ்லாமும்" அங்கு இல்லை
"சிங்களமும்," "தமிழும்"
சீண்டும் நிலையுமில்லை !...

கத்தியோடு கந்தவனம்
கம்பி தாங்கி கார்த்திகேசு
கதிகால் கட்டையெல்லாம்
கத்தி வெட்டில் இடுப்பொழந்து.

கத்தி பொல்லுக் கோடாலி,
களவெடுத்த "கரண்டுக்" கம்பி
கந்தவனம் படையணியின்
"கனரகத்து" ஆயுதங்கள்?...

வாளோடு வில்லுக் கத்தி
வரிச்சு மட்டை "சைக்கிள் செயின்"
வன்னியாலை வந்த பின்பு
வாங்கி வைச்ச திருக்கைவாலும்
"கோலோச்சும்" கார்த்திகேசுக்
கோவேந்தன் படைக்கலமே !...

அப்பன், மகன், சித்தப்பன்
அத்தை, மாமா, அம்மம்மா
மொத்தமாக இரு தரப்பும்
அத்தனையும் அணிதிரள !...





"எல்லை போட்டு விட்டால்
எடுப்பன் தலை இங்கே"
விடுத்தார் "அறிக்கை" ஒன்று
வீம்பர் கார்திகேசு

பெண்டுகள் தொட்டு
பொழுபெட்டை எல்லாம்
மிண்டி முழங்கி
மிகநல்லாய் பேசுதுகள்

கண்டு நாணும் அந்திப் பகல்
கறுப்புக் கொடி காட்டி நீண்ட
"கர்த்தால்" ஒன்று நடத்தி விட

இடுப்பொழந்த கால்கள்
எடுப்பாக நிமிர்ந்து நிற்க
எடுத்தார் கத்தி, கம்பி
"ஊடுருவல்" தடுக்க காத்தி

கந்தப்பு பின் நின்று
கடைக்குட்டி ராசனிடம்
"காலைமுறி காத்திக்கு"
கக்கினார் கட்டளையை

போர் ஒன்று மூளப்
புறப்படும் வேளையிலே,
"வாறாங்கள் ஆமி
ரவுண்டப்பாம் இங்காலை"
வழிப்போக்கன் வார்த்தை
காதை தொடுகையிலே
கதிகாலைத் தவிர – அந்த
எல்லையில் எதுவுமில்லை !...

06.11.1999

# கண்ணில் சுடரேந்து....!

சூதற் பனிக்கும்மிருட்டு - உயிர்
குழக்கும் நாய் குரைப்பு
ஆட்காட்டியின் அலறல் - ஆன்ம
வேக்காட்டின் இருளில்

யாழ்ப்பாணத் தெருவில் - கையில்
"லாந்தர்" ஒன்று ஏந்திவந்து
பகல் தொலைத்த வாழ்வொளியை - இருள்
விளக்கொளியில் தேடுவோனே

ஊரடங்கு வாழ்விதனில் - நீயோ
ஊரடங்கத் தேடுவது
தேச விடுதலையா? - அன்றித்
தீர்வுப் பொதிகளையா?

கண்ணாடி விளக்கேந்தி - நீ
காணத் தவிப்பது உன்
காலை பள்ளி சென்ற - தங்கைக்
காரியின் வரவினையா?

பிரசவத்திற்கு அவதிப்படும் - உன்
பெண்டாட்டி பேற்றுக்கு
"கார்" பிடிக்கும் பரபரப்பா - அன்றி
பாஸ் எடுக்கும் அவசரமா?

விளக்கெடுத்து விரைந்து சென்று - "கோல்"
வெளிநாட்டுக் கெடுப்பதற்கா?
புதிதாக வந்த படம் - ஊர்
சூழப் பார்ப்பதற்கா?





கதிரின் கரங்கள் உனை - அதி
காலையிலே வருமுன்னர்
காணாமல் போய் விடுவாய் - உன்
கண்ணில் சுடரேந்து

விளக்கொளியை காத்துக்கொள் - காற்று
வீச்சிலது அணைந்து விடும்
விளக்கணைந்த அடுத்த கணம் - தோட்டா
பிளக்குமுன் மார்பினையே

கனத்த இருள் கிழித்துவிட - உன்
கண்ணிலெடு நிலைத்த ஒளி
காலையொன்றில் சேவலொடு - இங்கு
வெண்புறாவும் கூவட்டும் !

15.01.2000.

# இதயம் மீட்டும் நிற்கும்

இதய வீணையிலே
சுரம்மீட்டும் காதலியே !
உதிர அணுக்களெல்லாம்
உறைந்து விட்ட சாரதியே !

ஆட்காட்டிக் கொழிந்து வந்து
அண்டியே உந்தன் வீட்டு
கறையான் பிடித்த மூலை வேலி
கரையோரமுன் காதோரம்
காரிருளில் காதல் பேச
காலம் வந்திடாதோ?

முத்துதிர்த்து முத்தாடி
முழு நிலவாய் சிரிக்கும் உனை
முழுதாய் குடிக்கையிலே
மழலை வீசும் மல்லிகைகள் - வேட்டு
மழையில் நனைந்த கதை
மறக்காது உறுத்துவதேன்

பண்டிபட்டிபாதிப் பனை வடலியோரம்
பாவை உன் கூந்தலெந்தன்
உயிர் கொண்டு கோதுகையில்
கருமுகில் கிழித்து வந்த
எரிவீழ்ந் தெழுந்த கரும்
புகையேனோ எனை வருத்தும்?





சொக்க வைக்கும் அழகே உன்
செம்மை இதழ் சுவைக்கச்
சிந்தை எனைச் சீண்டுகையில்
செல்லமடித்துச் சிதறுகின்ற
செங்குருதிக் கடல் எந்தன்
சிந்தையிலே எழுவது ஏன்?

மடியில் நான் தலை சாய்க்க
மார்பை நீ வருடி விடும்
படியாய் கிடக்கையிலே
ஆட்டோடு குட்டி ஒன்றை
"ஆட்லறி" துளைத்த கதை
அடிமனதில் எழுவதேனோ?

கைவிரல் பிணைத்து உனை
கட்டி தழுவி மீழும்
கணநேரம் ஏனோ?
இன்னும் திரும்பி வரா
இந்துவின் காதலனை
இதயம் மீட்டும் நிற்கும்

பூவுக்கு வாசம்
அந்நியமாய் போகையிலே
பாவுக்குள் கூடஇதை
பாடிவிட முடியவில்லை. !

23 .01.2000.

# பிள்ளைக் கூலிகள்

மொட்டாக முதிர்ந்து விட்ட
முல்லையே !
வேர் இறக்கா விதையே
விழுதிறக்கும் செயலை
உந்தன்
விரல்களிடை
திணித்தவர் யார்?

கண்ணாடிச் சட்டத்துள்
நிலவினைத் தேடும்
நிலாவே
இந்தக் கழுமரத்தை
காவுவதேனோ?

மேய்ப்பாரைத் தவறிய
மந்தைகளில் நீயும் ஒன்றா?
அன்றி
மேய்ப்பாரை மேய்ப்பதற்கே
மேதினியில் பிறந்தவளா?

உன் அருகில் இருப்பதென்ன?
வேரரித்து
விதை தாங்க மறுத்து
நிற்கும் விருட்சம் அன்றோ?
ஆனால் நீ
விருட்சத்தை
உன்னகத்தே ஆழப்புதைத்திட்ட
இள விதையோ?





உச்சி வகிர்ந்து
தலை பின்னி "றிபன்" முடித்து
தொப்பி கால் மேசுடனே
சப்பாத்தும் அணிந்து கொண்டு
வெள்ளைச் சிறகடித்து
பள்ளிப் பூங்காவில்
துள்ளிப் பறந்து வரும்
பட்டாம் பூச்சியே ! நீ
பென்சில் பிடித்து – நல்ல
விந்தை எழுத்து எழுதும்
ரோஜா இதழ் கரத்தில்
ராஜாங்கம் சுமப்பது ஏன்?

சங்கீத சாம்ராஜ்யமே
ராகத்தை வாழ வைக்க
தாளத்துக்கு ஏன் "கூலி"?

சிறு கூலி பெறுவதற்காய்
வசந்தத்தை விற்று விட்ட
பசுந்தளிரே !
சில காலம் பொறுத்துக் கொள்
உன் முதுகில்
சிலுவை ஏற்றியவர்கள்
சிரம் தாழ்த்தும் நிலை வரும்

உன் முன்னே
விளக்க வைக்கப்பட்டவை
வெறும் பாத்திரங்களல்ல
சமுதாயச் சாக்கடைகள்.

05.03.1998

# போர்வைக்குள் வாழ்வு

வெள்ளத்து மேல் விளிம்பில்
மிதக்கும் பாத்திரங்கள்
வெள்ளைத் துணி போர்த்த
தென்னோலைக் கூரைகள்
பிசகாது அளவெடுத்து
பின்னி வைத்த குடிசையுள்ளே
அசதியென்று அசந்து விட்டால்
அடுப்பே தலையணையாம்.

முற்றத்து வேப்பமரம்
பின்வளவு தென்னந்தோப்பு
பத்துப் பரப்பினிலே
முளையெறிந்த செய்கைநிலம்
சின்னப் பாதியிலே
பிஞ்சு விட்ட பிலா மரம்
சீட்டுப் பிடித்து வாங்கி
கட்டி வைத்த கறவை மாடு.

அறுவடைக்குப் பின்வந்த
அந்த ரண்டு வைக்கற்போர்
காயவைத்த புழுக்கொடியல்
காசுசேர்த்த “சல்லிமுட்டி”
பாடம் போட்டு வைத்திருந்த
சிப்பம் கட்டா பொயிலைச் சுமை
ஒய்வொழிச்சல் இல்லாமல்
உழைத்த காசால் உயர்ந்த வீடு
“பல்குழல்கள்” வெடிக்கையிலே
நெல்புலங்கள் நெருப்பாக





கொக்கோடு கோழிகளும்
அணில் காக்கா தாட்டான்கள்
விருந்துகள் தொலைந்திட
வெறுமைதான் வாழ்வாக
கதியற்று வந்த வாழ்வு
கனதூரம் நீண்டு விடும்?

மாரி மழை உறிஞ்சி
மதர்த்து வளர்ந்த பிலா
நாதி யாரும் இன்றி
நாறி அழுகி விழும்

பருவத்துப் பெண்கள் கூடி
கரகத்தை தலையிலேந்தி
நிரைநின்று ஆடுதல் போல்
நாற்றாடும் காட்சி பொய்க்க

அரண்மனை போல் வீட்டை விட்டு
அகதியென்ற பேரோடு
பிறர் மனைக்காய் அலைந்தலுத்து
குடிசையிலே வாழ்வு கண்டோம்

அகத்திலுள்ள மாந்தரெல்லாம்
மிகக் குளிரில் வாடி நிற்க
அவர் போட்ட கூரைகளோ
வெண்போர்வை போர்த்திருக்கு
அபிவிருத்தி மட்டுமல்ல
ஆட்கள் வாழ்வும் இப்படித்தான்.

24.05.2001.

# விட்டில்களும் அவற்றின் உலகும்

முற்றத்து மல்லிகைப் பந்தல் - அதன்
இலையிடுக்கில் வழியும் நிலவு
'பற்றிக்' போட்ட நிலவொளி - மணற்
கட்டிலும் அப்படியே காத்தபடி!

எய்திய சுகம்
எச்சங்கள் எய்திவிட
எத்தனை?...

'முடித்து' மூன்றாம் நாள்
முழுநிலவில் குழைத்த சோறு
நான் கடித்த மோர்மிளகாய் - அவள்
நாவில் உறைத்தல் கண்டு
நாணி முகிலிழுத்துப்
போர்த்து மறைந்த நிலா!

மூத்தவனைத் தாங்கி அவள்
'முட்டுப்பட்ட' வேளையிலே
மடிகிடத்தி மார் தடவி
மயிர்கோதி விட்டதனை
இலை இடுக்கில் பார்த்து
இளகி வழிந்த நிலா!

இன்றும் அப்படியே!

இறைத்த ஒளி...
மல்லிகைப் பந்தல்...
மணற் கட்டில்...





உயிர்நிறைய நிலவொளியை
பருகிடத் திராணியற்று
ஊளையிடும் நாய் ஒன்று
மண்ணணையில் படுத்தபடி!

காற்றுச் சினந்து துப்பும்
தூரத்து வேட்டொலி...
திராணியற்ற ஊளை ஒலி...
மின்விளக்கு ஒளியணைந்து
ரகசியமாய் ஒளிகசியும்
விளக்கு ஒன்று மூலையிலே.

விளக்கொளியில் விட்டில் ரண்டு!
மூத்தவனும் மருமகளும் விழிபிதுங்கி?...

01.09.2007.

# பழிப்பினை

நிர்வாணம் விரும்பிய
புத்தன் சொன்னான்:
“வாயில்லா ஜீவனை
வதைத்திடல் பாவம்
வையகத்தோரே
கொல்லாமை சீலம்.”

மனிதன் வகுத்த
சட்டம் சொன்னது:
“ஆடொன்று பார்க்க
மற்றொன்றை வெட்டல்
சீலம் அதுவல்ல
சிறைப்படுவீர் !”

“இருப்பை” விரும்பிய
மனிதன் சொன்னான்:
“நாலுபேர் பார்க்க
நடுத்தெருவில் சுடு
பழிப்பினை யாகட்டும்
நெறியுடன் வாழட்டும்.”!!

மனிதனைப் படைத்தவன்
மன்றாடிக் கேட்டான்:
“அறியாமல் செய்தேன் பாவி
ஆண்டவரே
மன்னிப்பீரா?”

05.10.2007.

மதிப்புடையீர்! திருவாளர். செ. [illegible]

சாத்வீக சுருதி வெளியீடாக

இராஜேஸ்கண்ணனின்

# வேர்வைக்குள் வாழ்வு



(கவிதை நூல்)

## அறிமுக அரங்கு



காலம் : 13.01.2008 - ஞாயிறு காலை 9மணி - 11.30 மணிவரை

இடம் : யா/தேவரையாளி இந்துக் கல்லூரி பிரதான மண்டபம்

தலைமை :

**திரு.சீ.சாந்தநாதன்** அவர்கள்

(முகாமையாளர், வ.பூ.பி.ஆலயம்)

பிரதம விருந்தினர்

**திரு.சி.சத்தியசீலன்** அவர்கள்

(பிரதேச செயலர், கரவெட்டி)

சிறப்பு விருந்தினர்

மூத்த எழுத்தாளர்

**கலாபூஷணம் தெணியான்** அவர்கள்

அறிமுகவுரை

**கலாநிதி த.கலாமணி** அவர்கள்

சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியியற்துறை,

யாழ்.பல்கலைக்கழகம்.

*உளமார்ந்த அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்*

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

**திரு.குட்டித்தம்பி** அவர்கள்
(அதிபர், யா/தேவரையாளி இ.கல்லூரி)

**திரு.சி.க.இராசேந்திரன்** அவர்கள்
(தலைவர், வதிரி தமிழ்மன்றம்)

தமிழ் வாழ்த்து

வரவேற்புரை - **திரு.வதிரி.கண.எதிர்வீரசிங்கம்** அவர்கள்

ஆசியுரை - **திரு.தி.வரதராஜன்**
(செயலாளர், வதிரி தமிழ்மன்றம்)

தலைமையுரை - **திரு.சீ.சாந்தநாதன்** அவர்கள்

பிரதமவிருந்தினர் உரை- **திரு.சி.சத்தியசீலன்** அவர்கள்
(பிரதேச செயலர், கரவெட்டி)

சிறப்புரை - **கலாபூஷணம் தெணியான்** அவர்கள்

அறிமுகவுரை - "கவிதையின் மொழி"
**கலாநிதி.த.கலாமணி** அவர்கள்

முதற் பிரதி பெறுபவர் - **திரு.சி.நடராசா** அவர்கள்

நூல் நயப்பு - "பழத்ததில் பிழத்த ஒன்று"

**திரு.சி.விமலன்** (இணை ஆசிரியர் - 'ஜீவநதி')

**திரு.த.அஜந்தகுமார்** (ஆசிரியர் - புதியதரிசனம்)

**திரு.இ.சு.முரளிதரன்** (ஆசிரியர் - ஏகலைவன்)

**திரு.சு.குணேஸ்வரன்** (புலம்பெயர் இலக்கிய ஆய்வாளர்)

நன்றியுடன் ஏற்புரை - **நூலாசிரியர்**

பிரதி ஒன்றுக்கான அன்பளிப்பு - ரூபா 50/=

- அரங்கின் ஏற்பாட்டாளர்



இராஜேஸ்கண்ணன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகவியல் சிறப்புப் பட்டதாரி; மானிடவியலை ஒரு பாடமாகப் பயின்று பட்டப்படிப்பு நிலையில் சில வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றியவர்; இன்று யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியர்; 'முதுசொமாக' என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதி மூலம் அடையாளம் பதித்தவர் (இவரின் சிறுகதை ஒன்று தரம் 10 தமிழ் இலக்கிய பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது). மேலும், இலக்கியம், பண்பாடு, சமூகவியல் என்பன குறித்து கட்டுரைகள் எழுதிவருபவர் இவர். தற்போது பட்டப்பின் படிப்பு 'கல்வி டிப்ளோமா' நெறியைப் பயின்றுவரும் இராஜேஸ் கண்ணன் அப்பயிற்சி நெறியில் 'உளவியலை' யும் ஒரு பாடமாகப் பயின்று வருகின்றார். இவை யாவும் 'இராஜேஸ்கண்ணனிடமிருந்து சிறந்த படைப்புகளை எதிர்பார்க்கலாம்' என்ற நம்பிக்கையைத் தருகின்றன...

15.11.2007

கலாநிதி த. கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

மதுரன் கிறாபிக்ஸ் & ஓவ்செற் பிறின்ரேர்ஸ் - அல்வாய் 021 2263099, 0776688318

சாத்வீகசுருதி
வெளியீடு